# அறநெறி அமுதம்

ஆன்மீக விழுமியக் காலாண்டிதழ் - 34

சித்திரை - ஆனி



இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு - 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதம் 9 துளி

*என் அன்புக் குழந்தைகளே!*

வீரர்களுக்கே முக்தி எளிதாகக் கிடைக்கிறது; பேடிகளுக்கு அல்ல. வீரர்களே கச்சையை வரிந்து கட்டுங்கள். மகா மோகமாகிய எதிரிகள் உங்கள் முன் உள்ளார்கள். பெருஞ் செயல்களுக்குத் தடைகள் பல என்பது உண்மைதான். என்றாலும் இறுதிவரை விடாமல் முயலுங்கள். மோகமாகிய முதலையிடம் சிக்கிய மனிதர்களைப் பாருங்கள். அந்தோ! இதயத்தைப் பிளக்கவல்ல அவர்களின் சோகக் கூக்குரலைக் கேளுங்கள். முன்னேறிச் செல்லுங்கள், முன்னேறிச் செல்லுங்கள். வீரர்களே! கட்டுண்டவர்களின் தளைகளை வெட்டியெறியவும், எளியவர்களின் துயரச் சுமையைக் குறைக்கவும், பாமரர்களின் இருண்ட உள்ளங்களை ஒளிபெறச் செய்யவும் முன்னேறிச் செல்லுங்கள். ‘அஞ்சாதே அஞ்சாதே’ என்று முழங்குகிறது வேதாந்த முரசு. பூமியில் வசிக்கின்ற மனிதர்கள் அனைவருடைய இதய முடிச்சுக்களையும் அது அவிழ்த்தெறியட்டும்.

என்றும் உங்கள் நலம் நாடும்

*உங்களின்,*

*சுவாமி விவேகானந்தா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை



*நிந்தந்து நீதி நிபுணா: யதி வா ஸ்து வந்து*
*லக்ஷ்மீ: ஸமாவிசது கச்சது வா யதேஷ்டம்*
*அத்யைவ மரணமஸ்து சதாப்தந்தரே வா*
*நயாயாத் பத: ப்ரவிசலந்தி பதம் ந தீரா:*
*-பர்த்ருஹரி. நீதி சதகம்.*

சான்றோர்கள் உன்னைப் பாராட்டட்டும் அல்லது பழிக்கட்டும். செல்வத்தின் தேவதையான லட்சுமி வரட்டும் அல்லது அவளுக்கு எங்கு விருப்பமோ அங்கே போகட்டும். மரணம் இன்றோ அல்லது நூறு ஆண்டுகள் கழித்தோ வரட்டும். என்ன நேர்ந்தாலும் மேலோர்கள் நேரான பாதையிலிருந்து ஒரு போதும் தவறமாட்டார்கள்.

*அவ்வல் என் செயுமருவினை யென் செயுந்*
*தொல்லை வல்வினைத் தொந்தந்தானென் செயுந்*
*தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு*
*எவ்லை இல்லாதோர் அடிமை பூண்டேனுக்கு.*
*- தேவாரம்.*

துன்பம், அறிந்திராத வினைகள், விரைவாகத் தொடர்ந்து வரும் தொல்லை எதுவும் தில்லை சிற்றம்பலவனிடம் எல்லையில்லாத அடிமை பூண்டவனை ஒன்றும் செய்யாது.

**இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.**
**40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு – 06.**

அமுதம் 9 துளி 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த இதழில்...

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| பிரார்த்தனை | 01 |
| இதழாசிரியர்களிடமிருந்து | 02 |
| கவிதை - "உதிரும் சருகுகள்... துளிர்க்கும் தளிர்கள்" | 03 |
| பாப்பா பாப்பா கதை கேளு -"பலரிடம் வேலை பார்த்த கழுதை" | 04 |
| உண்மைச்சம்பவம் - "உடலில்தான் ஊனம் உள்ளத்திலில்லை" | 06 |
| சத்திய சீலர் | 08 |
| ஜோதிர் லிங்கம் காசி - விஸ்வேஸ்வரர் | 09 |
| படக்கதை -"நேர்வழியில் செல்" | 12 |
| கீதையின் மகிமை | 15 |
| வரம் கேட்ட தேனீ | 16 |
| நான் இறைவனிடம் வலிமையைக் கேட்டேன்.......... | 18 |
| இராமகிருஷ்ண குடும்பம் -கிரீஷ் சந்திர கோஷ் | 20 |
| சுவாமிஜியும் குழந்தையும் | 22 |
| தன்வினை தன்னைச் சுடும் | 23 |
| செய்திகள் | 24 |

## இதழாசிரியர்களிடமிருந்து

பழையன கழியப் புதியன பூக்கும் இயற்கையின் நியதியை அடிப்படையாகக் கொண்டு கடந்த காலங்களில் பெற்ற அனுபவங்களின் உதவியுடன் புதிய சிந்தனைகளை உங்கள் உள்ளத்தில் விதைத்தற் பொருட்டு இம்முறை அறநெறி அமுதம் உங்கள் கரங்களை நாடி வந்திருக்கிறது.

இந்த அமுதத் துளியை, புரட்சிகரமான புதிய சிந்தனைகளின் ஊற்றாகிய பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருவடிகளில் சமர்ப்பிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


க. சொரூபன்

# உதிரும் சருகுகள்...
# துளிர்க்கும் துளிர்கள்...

காலத்தின் கோலத்தால் பூஞ்சோலை மணமிழக்கும்
காலனின் கோபத்தால் பச்சிலைகள் நிறமிழக்கும்
ஆனாலும் மரமந்தச் சருகுகளை உதறிவிடும்
தானாகப் பசுந்தளிர்கள் கிளைகளினை நிரப்பிவிடும்

கடந்த காலங்கள் முடிந்த கோலங்கள்
நடந்த சோகங்கள் கிடைத்த பாடங்கள்
சரிந்த கோட்டைகள் புதிய படிக்கற்கள்
மரித்த கனவுகள் மலரும் நனவுகள்

மானிடனே மரமாகு முடிந்ததனைச் சருகாக்கு
கனிதளிர்கள் காண்பதற்குக் கச்சிதமாய் நடைபோடு
வாழ்வு மலர்ந்துவிடும் வெற்றிவாகை வரவேற்கும்
புதிய வருடத்தில் புன்னகைகள் காத்திருக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பா பாப்பா கதை கேளு!

## பலரிடம் வேலை பார்த்த கழுதை

ஒரு ஊரில் ஒரு கழுதை துணி துவைக்கும் தொழிலாளி ஒருவனிடம் வேலை செய்து கொண்டிருந்தது. அது அவன் துவைக்க எடுத்துச் செல்லும் துணிகளையும் பின் துவைத்து முடிந்த துணிகளையும் சுமந்து வரும் வேலைகளை மட்டுமே செய்தது.

ஒரு நாள் அக்கழுதை, "இது என்ன கொடுமை! இவன் இவ்வாறு மாறி மாறி வேலை வாங்குகிறான், என்னால் இவ்வளவு பாரங்களை எல்லாம் தூக்க இயலாது. அதனால் பாரங்கள் சுமக்காமல், அதிக வேலை செய்யாமல் வேறு ஏதாவது சுகமான வேலையைத் தேடிப் போக வேண்டும்" என்று சலிப்புடன் கூறிக்கொண்டது. ஒரு நாள் மதியம் தொழிலாளி தூங்கிய நேரம் பார்த்து கழுதை அவ்விடத்தை விட்டு ஓடிப் போனது.

இவ்வாறு ஓடி வந்த கழுதை வேலைக்காக அங்குமிங்குமாகத் தேடி அலைந்தது. கடைசியாக ஒரு செங்கல் செய்பவனிடம் வந்து சேர்ந்தது. ஆனால் பாவம், அதற்கு துணிகளைச் சுமக்கும் பாரத்தை விட செங்கற்கள் பாரம் கூடியது என்று தெரியவில்லை. அது செங்கற்களைச் சுமந்து



நடந்த போது மிகவும் வேதனைப்பட்டு, 'கடவுளே இது என்ன! செங்கற்கள் துணிகளை விடப் பாரமாக இருக்கிறதே! என் முதுகே உடைந்து விடும் போல் இருக்கிறதே. நான் பேசாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணி துவைத்தவனிடமே இருந்திருக்கலாம்! ஆனால் இனி அங்கும் மறுபடி வேலைக்குப் போக இயலாது. பேசாமல் வேறு வேலை தேடலாம்' என எண்ணியது.

பின்பு ஒரு தோல் வியாபாரியிடம் போய்ச் சேர்ந்தது. தோல் செங்கற்கள் போல் பாரமாக இருக்கவில்லை. அதே போல் வேலையும் அதிகமாக இல்லை. அதற்கு தான் நினைத்த மாதிரி வேலை கிடைத்த சந்தோஷத்தில் அங்கேயே தொடர்ந்து வேலை செய்ய நினைத்தது.

இப்படியே காலமும் போனது. கழுதைக்கு வயதும் போனது. வயது போனதால் அதற்கு முன்பு போல் வேலை செய்ய இயலாமல் இருந்தது. எப்போதும் அது நித்திரையிலேயே காலத்தைக் கழித்தது. இதைக் கவனித்த வியாபாரி, 'என்ன, இந்தக் கழுதை வேலை ஒன்றும் செய்யாமல் சும்மாவே இருக்கிறது. இனி இதற்கு வீணாகச் செலவு செய்து தீனி எல்லாம் போட இயலாது. பேசாமல் இதனுடைய தோலையும் எடுத்து விற்றுவிட வேண்டியதுதான்' என்று எண்ணினான். ஒரு நாள் வியாபாரி தான் நினைத்தது போல கழுதையைக் கொன்று அதனுடைய தோலை விற்று விட்டான்.

துன்பங்களைக் கண்டு ஓடி ஒளிவதால் அவை நம்மை விட்டுப் போகப் போவது இல்லை. மாறாக எவ்வேலையாயினும் அது இறைவன் கொடுத்த வேலை என நினைத்துச் செய்வதனாலேயே மனநிறைவு கிடைக்கும்.

தைரியசாலிகளும்,
மனவலிமை மிக்கவர்களும் எப்போதும்
ஒழுக்க வழியிலேயே நிற்பார்கள் அறவழியில்
நின்று தைரியத்துடனும், இரக்கத்துடனும்
இருக்கப் பாடுபடுங்கள்.
எழுந்திருங்கள், உறுதியுடனும் தைரியத்துடனும்
இருங்கள். பொறுப்பு முழுவதையும் உங்கள்
தோள்களிலேயே சுமந்து கொள்ளுங்கள்.
உங்கள் விதிக்கு நீங்களே காரணம்
என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.
-சுவாமி விவேகானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலில்தான் ஊனம் உள்ளத்திலில்லை

இன்று பலர் உடலில் ஏற்படும் சிறு சிறு குறைகளுக்கே மனம் தளர்ந்து போகின்றனர். மற்றவர்களைப் போல் நாம் இல்லையே, அதனால் நம்மால் எதுவும் செய்ய முடியாது என்று நினைத்து மூலையில் முடங்கிக் கிடக்கின்றனர். இன்னும் சிலரோ ஊக்கத்தோடு செயற்பட்டாலும் மற்றவர்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் பயந்து முயற்சியைக் கைவிட்டு தமது திறமைகளை வீணாக்குகின்றனர். ஆனால் இரண்டரை அடி மட்டுமே உயரமான இளைஞன் ஒருவன் றகர் கால்பந்தாட்ட விளையாட்டில் (Rugbi) திறமையாக விளையாடினான் என்றால் நம்புவீர்களா?

ஆம், அவன் பெயர் டேனியல் டொரெஸ். அமெரிக்காவின் ஹூஸ்டன் மாநிலத்தைச் சேர்ந்தவன். இவன் பிறந்த போது டாக்டர் அவனது நிலையைப் பார்த்து அவனது தாயாரிடம், "சர்க்கஸ் கம்பனியில் சேர்த்துவிட்டால் அவனது எதிர்காலத்திற்கு நல்லது" என்று கூறியபோது அந்தத் தாய் அதிர்ச்சியடைந்துவிட்டாள்.

ஆனால் வழமைக்கு மாறாக டேனியல் படிப்பிலும், றகர் கால்பந்தாட்ட விளையாட்டிலும் சிறந்து விளங்கினான். இவனது திறமை காரணமாக றகர் கால்பந்தாட்ட விளையாட்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டான். அக்குழுவில் இருந்த ஏனைய வீரர்கள் அவனது உருவைப் பார்த்துக் கேலியும் கிண்டலும் செய்தனர். டேனியல் அவற்றைப் பொருட்படுத்தாது விளையாட்டில் முழு முயற்சியுடன் ஈடுபட்டான். அவன் மைதானத்தில் விளையாடும்போதும் ரசிகர்கள் அவனைக் கிண்டல் செய்வார்கள். ஆனால் அவனோ அதனால் மனம் தளராமல் மேலும் சிறப்பாக விளையாடி தனது குழுவுக்கும், பாடசாலைக்கும் பெருமை தேடிக் கொடுத்தான். இவன் இவ்வாறு றகர் கால்பந்தாட்ட விளையாட்டில் சிறந்து விளங்க அவனது பாடசாலை ஆசிரியர்கள் பெரிதும் உதவினர்.

மற்றவர்களது கேலியும் கிண்டலும் தொடர்ந்ததால் ஒருநாள் தன் தாயாரிடம் சென்று "என்னால் குள்ளனாக வாழ முடியாது. நானும் மற்றவர்களைப் போல உயரமான மனிதனாக வாழ வேண்டும்." எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூறி அழுதான். "இது கடவுள் கொடுத்த வரம். அதை மாற்ற யாராலும் முடியாது." எனத் தாயார் மகனைச் சமாதானப் படுத்தினார். ஒருநாள் உலகிலுள்ள குள்ளர்கள் அனைவரும் கலந்து கொண்ட பயிற்சி வகுப்பில் பங்குபற்றியதன் பின்னரே அவன் மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டானாம்.

குள்ளனாக இருந்தாலும் எனது வாழ்க்கை மகிழ்ச்சிகரமானது என்கிறார் இவர். இவ்வளவு விடாமுயற்சியும் உறுதியான மனமும் கொண்ட இவரை ஊனமுற்றவர் என்று கூற முடியுமா?

- நன்றி 'வீரகேசரி'

*எச்செயலிலும் வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடாமுயற்சியும் பெரும் மனவுறுதியையும் கொண்டிருக்க வேண்டும். - சுவாமி விவேகானந்தர்*

இறைவா...
கண்கள் உன்னைக் காண இயலவில்லை; நீ ஒவ்வொரு கண்ணிலும் உறைகிறாய். உள்ளம் உன்னை அறிய இயலவில்லை; நீ உள்ளத்தின் உள்ளேயே மறைந்து நிற்கிறாய். புலன்களுக்கு வசமான மனம் பைத்தியம் போலப் பத்துத் திசைகளிலும் ஓயாமல் ஓடுகிறது. என் அகத்தில் கண் கொட்டாமல் நான் ஓய்வுறும் போதும், தூங்கும் போதும் எப்போதும் நீ விழித்திருக்கிறாய். எவனை அனைவரும் துறந்தார்களோ, எவனுக்கு யாரும் இல்லையோ, அவனுக்கு நீ இருக்கிறாய்; உன் நட்பு உள்ளது. புகலற்றவனும், நடுத் தெருவை வீடாகக் கொண்டவனும் உன் மாளிகைக்கு வருகிறான்.
உன்னைத் தவிர வேறு தோழன் இல்லை. எதிரில் எல்லையற்றுப் பரந்துள்ள வாழ்க்கையையும் காலக் கடலையும் நீ எப்படித் தாண்டுகிறாயோ அதை எவனும் அறியான். எனக்குத் தெரிந்தது இதுதான்; நீ இருப்பதால் நான் இருக்கிறேன். நீ உயிரானவன்; அதனால் நான் உயிரோடு இருக்கிறேன்.

-ரவீந்திரநாத் தாகூர் (நன்றி ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திய சீலர்

மோகன் மிகவும் வெட்க சுபாவமுள்ளவன். பாடசாலை மணி அடித்ததும், மற்றவர்கள் போல் நண்பர்களுடன் அரட்டையடிக்காமல் நேரே வீடு செல்வான்.



ஒருநாள் அப்பாடசாலைக்கு ஓர் அதிகாரி வந்தார். அவர் மோகனின் வகுப்பிற்கு வந்து எல்லோருக்கும் ஐந்து ஆங்கிலச் சொற்களைச் சொல்லி எழுதச் சொன்னார். மோகன் நான்கு சொற்களைச் சரியாக எழுதினான். ஒரு சொல் அவனுக்குத் தெரியவில்லை. மோகன் யோசித்துக் கொண்டிருப்பதைக் கண்ட ஆசிரியர், அதிகாரிக்குத் தெரியாமல், அவனைப் பக்கத்தில் உள்ளவனிடம் இருந்து பார்த்து எழுதச் சொல்லிச் சைகை காட்டினார். ஆனால் மோகன் அவரின் சைக்கையைப் பொருட்படுத்தாமல் தனக்குத் தெரிந்த நான்கு சொற்களை மட்டுமே எழுதினான்.

மற்றவர்கள் எல்லோரும் ஐந்து சொற்களும் சரியாக எழுதினார்கள்.

அந்த அதிகாரி சென்ற பின்பு ஆசிரியர் மோகனைப் பார்த்துக் கோபமாக, 'நான் உன்னைப் பக்கத்தில் உள்ளவனைப் பார்த்து எழுதச் சொன்னேன் அல்லவா? உன்னால் அதைக் கூடவா செய்ய முடியவில்லை?' என ஏசினார். அவனைப் பார்த்து வகுப்பில் உள்ள எல்லோரும் சிரித்தார்கள். ஆனால் அதைப்பற்றி மோகன் சிறிதும் கவலைப் படவில்லை. அவன் செய்ததில் எவ்வித தவறுமில்லை என்பதை அவன் அறிவான்.



இவ்வாறு சிறுவயதிலேயே நேர்மையில் உறுதியுடனிருந்த இந்தச் சிறுவனே பிற்காலத்தில் சத்தியத்தின் இருப்பிடமான மகாத்மா காந்தியாக விளங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜோதிர் லிங்கம்
## காசி - விஸ்வேஸ்வரர்

இந்துவாகப் பிறந்த ஒவ்வொருவரும் சென்று தரிசிக்க வேண்டிய புண்ணியத் தலம் காசி திருத்தலம் ஆகும். அது, பந்தங்களை நீக்கி மோட்சத்தைத் தரவல்ல பவித்திர சேத்திரம். எப்பொழுதும் தேவர்களின் ஸ்பரிசத்துடன் மூவுலகத்தை ஆளும் விஸ்வநாதனின் உறைவிடமான இந்த காசி ஒவ்வொருவரும் சென்று தரிசிக்க வேண்டிய புனிதத் தலம் ஆகும். அதனால்தான் யாவரும் தமது வாழ்க்கையில் ஒரு முறையாவது இந்த ஞான பூமியைத் தரிசிக்க வேண்டும் என நினைப்பார்கள். தர்ம, அர்த்த, காம, மோட்சத்திற்கு காசி முக்கிய சேத்திரமாக விளங்குகின்றது. இங்கு வீற்றிருக்கின்ற இறைவனான 'விஸ்வேஸ்வரர்' பன்னிரு ஜோதிர்லிங்கங்களுள் ஒன்றாகத் திகழ்கின்றார்.

விஸ்வேஸ்வர ஜோதிர்லிங்கம் புராண காலத்தில் பிரசித்தி பெற்ற காசி நகரில் அமைந்துள்ளது. மோட்சத்தை அளிக்கும் ஏழு பிரதான சேத்திரங்களுள் காசி மிக முக்கியமான நகரமாகும். சதுர் வேதங்களிலும், புராணங்களிலும் காசி சேத்திர மகிமை வர்ணிக்கப்பட்டுள்ளது. சிறப்பாக கந்தபுராணத்தில் காசி காண்டம் என்ற பகுதியில் இத்தலத்தின் அளவற்ற மகிமை விபரமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது. இத்தலத்தில் இரண்டு பக்கங்களிலும் 'வருணா', 'அசி' எனும் நதிகள் பாயும் காரணத்தால் இந்நகரத்திற்கு வாரணாசி என்றும் பெயருண்டு. மேலும் மகாஸ்மஷானம்(மயானம்), ஆனந்த கானகம், அவிமுக்தம், ருத்ரவாசம், முக்திபூமி, சிவபுரி, சேஷ்த்ரபுரி, காசி எனவும் பல பெயர்கள் உள்ளன.

உருவமற்ற பரமசிவன் பூவுலகைப் படைக்க எண்ணி சகல குணநலன்களும் நிறைந்த சிவஸ்வரூபமாகிய பரப்பிரம்ம சக்தியாகவும் சிவனாகவும் உருவம் கொண்டார். அந்த சிவசக்தி இயற்கையையும் (ப்ரகிருதி), புருஷனையும்(மகாவிஷ்ணு) படைத்தனர். ஆனால் இவர்கள் இருவரும் தங்கள் தாய் தந்தையரைத் தெரிந்து கொள்ள முடியாமல் வருந்தினார்கள். அதே சமயத்தில் பரப்பிரம்மமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமசிவன் அங்கு தோன்றி 'நீங்கள் இருவரும் தவம் செய்து பிரபஞ்சத்தை உருவாக்குங்கள்' என்றார். அப்பொழுது இயற்கையும் புருஷனும் பரமசிவனைப் பார்த்து "நாம் தவம் செய்வதற்குப் பொருத்தமான இடத்தைக் காட்டியருள்க" என்று கேட்டனர். உடனே பரமசிவன் இவர்களுக்கு அருகில் ஐந்து காத அளவு சுற்றளவுள்ள நகரைப் படைத்து அருளினார். அந்நகரம் இவர்களுக்கு அருகில் ஆகாயத்தில் நின்றது. அதுவே காசி நகரமாகும்.



மஹாவிஷ்ணு காசி நகரில் இருந்து சிருஷ்டித் தொழிலை ஆரம்பிக்க எண்ணிப் பலகாலம் தவஞ் செய்தார். அந்த நேரம் அவர் உடலில் இருந்து வெண்ணிற நீர் ஊற்றெடுத்து விசாலமான ஆகாயத்தில் வியாபித்தது. இந்த விசித்திரக் காட்சியைக் கண்ட விஷ்ணு பகவான் ஆச்சரியத்துடன் தலை குனிந்தார். அப்பொழுது அவரது வலது காதில் அணிந்திருந்த 'மணிபூஷணம்' என்ற ஆபரணமானது கீழே விழுந்தது. அது விழுந்த இடமே மணிகர்ணிகை என்ற மஹாதீர்த்தமாகிவிட்டது. அளவற்ற அந்நீரால் காசி நகரமே மூழ்க ஆரம்பித்தது. பிரளயகாலம் உண்டானது. உடனே பரமேஸ்வரன் இந்நகரத்தைத் தம் சூலத்தின் மீது நிறுத்திக் காத்ததாகச் சொல்வார்கள்.

மஹாவிஷ்ணு தனது மனைவியாகிய ப்ரகிருதி(இயற்கை) உடன் அங்கு நித்திரை செய்தார். அப்போது அவரது தொப்புளில் இருந்து நான்முகப்பரப்பிரம்மா அவதரித்தார். அவர் ஆக்ஞை பெற்று பிரபஞ்சத்தை விடவும் பெரிதான பரமார்த்தஸ்வரூபியாக பரமசிவனை புருஷனான மஹாவிஷ்ணு பலவாறு ஸ்துதி செய்தார். ஸ்ரீமந் நாராயணனின் ஸ்தோத்திரங்களால் மகிழ்ந்த சிவபெருமான் பிரம்மா, விஷ்ணு இருவரது கோரிக்கைகளையும் ஏற்று நிரந்தர ஜோதியாக வெளிப்பட்டு விஸ்வேஸ்வரர் ஜோதிர்லிங்கமாக அருள்பாலித்து வருகின்றார். காசி சேத்திரத்தில் எண்ணிலா புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. அன்னபூரணி, விசாலாட்சி, காலபைரவர், பிந்துமாதவஸ்ஸீ முதலிய அநேக புண்ணிய தலங்களும் உள்ளன. கோடி லிங்கங்களுடன் கூடிய இச்சேத்திரம் 84(இந்து) மடங்களுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையிடமாக உள்ளது. கங்கை நதிக்குக் காசியில் 37 படித்துறைகள் உள்ளன. இவற்றில் மணிகர்ணிகை, தசாஸ்வமேத, ப்ரம்மகுண்ட, கேதாரகட், ஹரிச்சந்திர என்பன முக்கியமானவை ஆகும். இச்சேத்திரத்தின் அதிபதி காலபைரைவர் ஆவார்.

மனித சரீரத்தில் இதயத்துக்கு எவ்வளவு முக்கியம் உள்ளதோ அவ்வளவு முக்கியத்துவம் பாரததேசத்தில் காசிக்கு உண்டு. இன்னுமொரு விசேடம் என்னவென்றால் பக்தர்கள் விஸ்வநாதப் பெருமானைத் தரிசிப்பது மட்டுமல்லாமல் தொட்டும் வணங்கலாம். இச் சேத்திரத்தில் மரணமடைந்தோருக்குக் காசி விஸ்வநாதர் வலது காதில் தாரக மந்திரத்தை உபதேசித்து முக்தியளிக்கின்றார் என்று புராணங்கள் சொல்கின்றன.

நமது குருதேவரான ஸ்ரீராமகிருஷ்ணர் மணிகர்ணிகைப் படித்துறையில் ஓர் அற்புதமான காட்சியைக் கண்டார். அக்காட்சியைப்பற்றி மதுர்பாபுவிடமும் பிறரிடமும் பின்வருமாறு கூறுகின்றார். 'உயரமான ஒரு வெண்ணிற மனிதர் மஞ்சள் நிற சடாமுடியுடன் கம்பீரமாக நடந்து வந்து அங்கு எரிந்து கொண்டிருந்த சிதைகள் ஒவ்வொன்றின் அருகிலும் சென்றார். அங்கிருந்த உயிரை எழுப்பினார். அதன் வலது செவியில் தாரக மந்திரத்தை ஓதினார். சர்வ வல்லமை பொருந்திய மஹாசக்தியானவள், மஹாகாளியின் உருவத்தில் சிதையின் மறுபக்கத்தில் அமர்ந்து, அந்த உயிர்களைப் பிணைத்திருக்கும் தூல, சூட்சும, காரண, சம்ஸ்கார பந்தங்களை எல்லாம் நீக்கினாள். தம் கைகளினாலேயே முக்தியின் வாசலைத் திறந்து அந்த உயிர்களை அகண்ட சச்சிதானந்தப் பொருளில் ஒன்றச் செய்தனர். இப்பேரானந்தக் காட்சியை நான் கண்டேன்' என்றார் எமது குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர்.


காசி காண்டத்தில் இங்கே இறப்பவர்களுக்கு முக்தி கிடைப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் சிவபெருமான் அதை எவ்வாறு செய்கின்றார் என விளக்கமாகக் கூறப்படவில்லை. ஆனால் நம் குருதேவர் கண்ட அற்புதக் காட்சி மூலம் இதை நாம் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது.

எப்போது காசிக்குச் செல்வேன், எப்போது காசி விஸ்வநாதரைத் தரிசிப்பேன் என மனதில் சதா நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு, காசியில் வாழும் புண்ணிய பலன் கிடைக்கும் எனக் காசி புராணத்தில் கூறப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர்வழியில் செல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கீதையின் மகிமை

ஜேர்மனியின் தலைநகர் பேர்லின் (Berlin) மீது நேசநாடுகளின் (இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா) விமானங்கள் குண்டுமழை பொழிந்து கொண்டிருந்தன. மக்கள் அனைவரும் பதற்றத்துடன் பதுங்கு குழிகளை நோக்கி ஓடிக் கொண்டிருந்தனர். அங்கிருந்த ஓர் ஜெர்மனியப் படையதிகாரி நிலக்கீழ்ப் பதுங்கு குழியினுள் பாதுகாப்பாகத் தங்கியிருந்தார். குண்டு வீச்சு விமானங்கள் சென்றதும் அனைவரும் பதுங்கு குழிகளை விட்டு வெளியே வந்து வேறு பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடிச் சென்று கொண்டிருந்தனர்.

எல்லோரும் பதற்றத்துடன் ஓடிக்கொண்டிருந்தபோது ஒரு பெண்மணி மட்டும் எவ்வித பதற்றமும் இன்றி மிகவும் அமைதியான முறையில் நடந்து சென்று கொண்டிருந்தார். இதைக் கண்ட படையதிகாரி மிகவும் வியந்துபோனார். அப்பெண்மணி அருகில் சென்று "நீங்கள் வேறு இடத்திற்குச் செல்லவில்லையா?" என்று வினவினார். அதற்கு அப்பெண்மணி மிகவும் அமைதியாக "நான் மக்களுடைய வேகத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறேன்." என்று கூறினார். "அப்படியானால் உங்கள் மனதில் பயம் இல்லையா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் படையதிகாரி. அதற்கு அப்பெண்மணி கூறிய பதில் என்ன தெரியுமா? "நான் கீதை படித்திருக்கிறேன். மரணத்திலும் பதற்றமின்றி அமைதியாய் இருக்கும் மனப்பக்குவத்தை கீதை எனக்குத் தந்தது" எனப் பதிலளித்தார்.



இச்சம்பவம் அப்படையதிகாரியின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாக அவர் கீதையைக் கற்றுத் தன் வாழ்வில் உய்வடைந்தார் என்பது வரலாறு. அந்தப் படையதிகாரியே பிற்காலத்தில் சர்வதேச சட்டத்தில் நிபுணராக விளங்கிய மேதை "ஜோசப் பர்பர்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம் கேட்ட தேனீ



மலை உச்சியில் ஒரு மரத்தில் ஒரு பெரிய தேன் கூடு இருந்தது. அந்தத் தேன் கூட்டில் தேனீக்கள் ஓயாது வேலை செய்து கொண்டே இருந்தன. தேனீக்கள் எங்கெங்கோ சென்று பூக்களில் இருந்து தேனைக் கொண்டு வந்து சேர்த்த வண்ணம் சுறுசுறுப்பாக இருந்தன.

இதைப் பார்த்துப் பெருமை கொண்டது அத்தேனீகளுக்குத் தலைவியாகிய இராணித் தேனீ. ஒரு நாள் இராணித் தேனீ, 'நம் தேனீக்கள் எங்கெங்கோ எல்லாம் தேடி அலைந்து தேனைக் கொண்டுவந்து சேர்கின்றன. ஆனால் இந்த மனிதர்கள் நாங்கள் கஷ்டப்பட்டுச் சேர்க்கும் தேனை எடுத்துச் செல்கிறார்களே, அவர்கள் இனிமேல் தேனை எடுக்காதவாறு செய்ய வேண்டும்' எனத் தனக்குள் எண்ணிக் கொண்டது.

பின் ஒரு நாள் தன் சக தேனீக்களிடம், "நாங்கள் கஷ்டப்பட்டுச் சேர்க்கும் தேனை எடுக்க வரும் மனிதர்களைத் துரத்தியடிக்க வேண்டும். எங்கள் தேன் எமக்கு மட்டுமே உரியது. மனிதர்கள் நம்மிடம் வராமல் இருக்க என்ன செய்யலாம்?" என்று கேட்டது. அதற்கு சில தேனீக்கள் "இல்லை, வேண்டாம். நமக்குக் கிடைக்கும் பொருளை மற்றவர்களுக்கும் கொடுத்து வாழ்வதிலேதான் திருப்தியும் இன்பமும் இருக்கிறது. மனிதர்களால் தேனைப் பூவில் இருந்து எடுக்க இயலாது. எங்களால் அது முடியும். அதனால் பாவம், அவர்கள் எடுத்துக் கொள்ளட்டுமே!" என்று கூறின. ஆனால் இராணித் தேனீக்கு அந்த முடிவில் சற்றும் உடன்பாடு இல்லை. எனவே அது, 'தங்ளைப் படைத்தது கடவுள் தான். அதனால் அவரிடமே தவம் இருந்து வரம் கேட்போம்' என்று முடிவெடுத்துத் தவம் செய்யத் தொடங்கியது.

இவ்வாறு நெடுநாள் ஆனது. இறைவனும் தேனீயின் தவத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து அதன் முன் தோன்றினார். "தேனீயே உன் மன உறுதியையும் பக்தியையும் கண்டு நான் மகிழ்கிறேன். உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள் தருகிறேன்." என்று கூறினார். இறைவனே நம் முன் தோன்றி இருக்கின்றார் என்ற பெருமையால் தேனீக்குத் தலைகால் புரியவில்லை. உடனே அது, "இறைவா, மனிதர்கள் நாங்கள் கஷ்டப்பட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகரிக்கும் தேனை எடுக்கிறார்கள். அதை அவர்கள் எடுக்காமல் இருக்க வேண்டும். அதற்கு நீங்கள்தான் அருள் புரிய வேண்டும்" என்று கேட்டது. இருந்தாலும் கேட்டதைக் கொடுப்பவன்தானே இறைவன்! அதனால் "தேனீயே நீ கேட்ட வரத்தை உன் விருப்பப்படியே உங்கள் இனத்திற்கே தருகிறேன். ஆனால் மற்றவர்களுக்கும் கொடுத்து வாழ்வதிலேதான் இன்பம் இருக்கிறது. ஆனால் நான் உங்களுக்கு கொடுக்கைத் தருகிறேன். நீங்கள் கொடுக்கினால் மனிதர்களைக் கொட்டினால் அவர்களுக்கு நோகும். அதனால் அவர்கள் உங்கள் கூட்டுக்கு அருகில் வரமாட்டார்கள். ஆனால் அவர்களை நீங்கள் கொடுக்கினால் கொட்டியதும் நீங்களும் இறந்து போவீர்கள். இது உங்கள் எல்லாருக்கும் ஒரு பாடமாக இருக்கட்டும். மற்றவர்களுக்கு எப்போதும் நன்மை மட்டுமே செய்ய வேண்டும். தீமை செய்ய நினைத்தால் அது நமக்கே தீமையாக முடியும். இதை எல்லோரும் உணர வேண்டும்" என்று கூறிவிட்டு மறைந்துவிட்டார் கடவுள்.

தான் செய்த பிழையைத் தேனீ உணர்ந்தது. தன் இனத்திற்கே தான் கெடுதல் செய்துவிட்டேனே என்று மனம் மிகவும் வேதனைப் பட்டது. இனி ஒன்றும் செய்ய இயலாது என்று கவலையுடன் தன் கூட்டுக்குத் திரும்பியது.

பிறருக்கு நன்மை செய்பவன் தனக்கு நன்மை செய்கிறான். பிறருக்குக் கெட்டது செய்பவன் தனக்கே கெட்டது செய்கிறான் என்பதை உணர்ந்து முடிந்தவரை, மற்றவர்களுக்கு நல்லது செய்யாவிட்டாலும் கெட்டதாவது செய்யாமல் இருப்போம்.

### *வணக்கம்*

*நாம் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது நெஞ்சின் முன் இரு கரங்களையும் சேர்த்து வணக்கம் கூறுகிறோம். நாம் நெஞ்சின் முன் கரங்களை சேர்ப்பது 'நம் இருவரின் மனங்களும் சந்திக்கட்டும்' என்பதை எடுத்துக் கூறுவதற்காகும். என்னுள் இருக்கும் பரம்பொருள் உன் இதயத்திலும் இருக்கிறது. ஆகவே நீ புனிதமானவன். உன்னை நான் நேசிக்கிறேன். மதிக்கிறேன். வணங்குகிறேன் என்ற தத்துவத்தை இது எடுத்துணர்த்துகிறது.*

*இந்த உண்மைகளை நாம் உணரும்போது நமது வரவேற்பு ஓர் சடங்காகவோ. கருத்தாழமற்ற செயலாகவோ. சொல்லாகவோ இருக்காது. மாறாக ஒருவரை வரவேற்கையில் நமது வணக்கம் இருவருக்குமிடையில் அன்பும். மரியாதையும் கலந்த ஒரு சூழ்நிலையை உருவாக்கி அதன் பலனாக உணர்ச்சி பூர்வமாக ஒருவருக்கொருவர் ஒன்றிட வழிவகுக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் இறைவனிடம் வலிமையைக் கேட்டேன்.........!

மனிதன் ஒருவன் புழுக்கூட்டிலிருக்கும் வண்ணத்துப்பூச்சி ஒன்றைக் கண்டான். ஒரு நாள் அப்புழுக்கூட்டிலிருந்து சிறு வாயில் தோன்றியது. இதைக் கண்ட அம்மனிதன் அப்புழுக்கூட்டிற்கு அருகில் உட்கார்ந்து, அந்த வண்ணத்துப்பூச்சி அதன் புழுக்கூட்டிலிருந்து வெளியே வருவதற்கு மிகவும் கஷ்டப்பட்டுப் போராடிக் கொண்டிருந்த காட்சியைப் பார்த்துக் கொண்டு இருந்தான். சற்று நேரத்தின் பின் கடும் முயற்சி செய்து களைத்து விட்டது போல் அவ்வண்ணத்துப்பூச்சி அதன் போராட்டத்தை சிறிது நேரத்திற்கு இடைநிறுத்திக் கொண்டது.

இதைப் பார்த்த மனிதன் வண்ணத்துப்பூச்சிக்கு உதவி செய்வோம் என்றெண்ணிக் கத்திரிக்கோலை எடுத்து அப்புழுக்கூட்டை அறுத்து விட்டான். உடனே அவ்வண்ணத்துப்பூச்சி சுகமாக வெளியேறியது. ஆனால் அது வீங்கிய உடலுடனும் உலர்ந்து சுருங்கிப்போன இறக்கைகளோடும்தான் வெளியேறியது.

அம்மனிதனோ வண்ணத்துப்பூச்சி சிறிது நேரத்தில் அதன் இயற்கையான உருவத்தைப் பெற்றுப் பறக்கும் என்ற ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆனால் அந்த நொடியிலிருந்து அம்மனிதனின் எதிர்பார்ப்புகளுக்கு எதிராகவே நிகழ்வுகள் நடந்தன. வண்ணத்துப்பூச்சி அதன் இறுதி நொடிகளைப் பெருத்த உடலுடனும் சுருங்கிய இறக்கைகளோடும் நிலத்தில் ஊர்ந்த வண்ணம் கழித்துவிட்டு இறந்தது. அந்த வண்ணத்துப்பூச்சியால் ஒரு தடவைகூடப் பறக்க முடியாமல் போய்விட்டது.



வண்ணத்துப்பூச்சி தனது தைரியத்தைப் பாவித்து அக்கூட்டை உடைக்க எத்தனிக்கும் போது அதன் உடலிலுள்ள நீர் இறக்கைகளுக்கு தள்ளப்பட்டு அந்த இறக்கைகள் விரிந்து பெரிதாகின்றது. நீர் உடலைவிட்டு இறக்கைகளுக்கு போவதனால் உடல் சிறிதாகும். இச்செயற்பாட்டினால் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டை விட்டு வெளிவரும்போது பறப்பதற்குத் தயாராகிவிடும்.

அந்த மனிதன் அன்பினால் செய்த காரியம் விபரீதமான விளைவைக் கொடுத்தது. இறைவன், சுழற்சியான இயற்கை நிகழ்ச்சிகளால் ஒரு உயிரின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பலவிதத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்.

அன்பு உள்ளங்களே! எமது வாழ்க்கையில் போராட்டங்கள் நிச்சயம் தேவைதான். இறைவன் இத்தகைய போராட்டங்களை எங்களுக்குத் தராவிட்டால் நாமும் இக்கதையில் வரும் வண்ணத்துப்பூச்சியைப் போல் பலவீனமாகிவிடுவோம். எனவே இறைவன் நமது வாழ்க்கையில் எத்தகைய போராட்டத்தைத் தந்தாலும் அது நமது வெற்றிக்கு ஒரு பாதையே.

*நான் இறைவனிடம் வலிமையைக் கேட்டேன்.........*
*ஆனால் இறைவன் பல சோதனைகளைத் தந்து என்னை வலிமையாக்கினார்.*

ஊக்கமது கைவிடேல்

செயலில் ஈடுபடும் பொழுது தடங்கல் ஏற்படுமானால் அதனைக் கண்டு தைரியத்தைக் கைவிடக் கூடாது.

ஔவையார்

***கோலங்கள்***

***புராண காலந் தொட்டு இந்துக்களின் இல்லங்களிலும் கோயில்களிலும் கோலங்கள் முக்கிய இடத்தைப் பெற்று வந்துள்ளன.***

***இவற்றில் ஒரு ஆன்மிகத் தத்துவம் புதைந்துள்ளது. கோலத்தின் நடுப்புள்ளி சிவனையும், சுற்றும் கோடுகள் சக்தியையும் குறிக்கும். முதுகு வளைந்து கொடுத்தால்தான் கோலம் போட முடியும். அகம்பாவத்தைக் களைந்து தலை குனிந்து பணிந்தால்தான் சிவனை அடைய முடியும் என்பதே கோலத்தின் தத்துவமாகும்.***

***பச்சரிசி மாவில் சிறிது மஞ்சள் தூளைச் சேர்த்தோ, சேர்க்காமலோ கோலமிடுவதே முறை. பறவைகள், எறும்பினங்கள் ஆகியவற்றுக்கு உணவாகப் பயன்பட வேண்டும் என்பதே இதன் நோக்கம். மஞ்சள் தூள் கலந்து கோலமிடுவதால் தொற்றுநோய்க் கிருமிகள் வீட்டிற்குள் பரவுவது தடுக்கப் படுகிறது. அத்துடன் பாம்பு, தேள் போன்ற கொடிய உயிரினங்கள், தீய சக்திகள் மஞ்சள் வாசனைக்கு வீட்டிற்குள் நுழையாது என்பது ஐதீகம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதார புருஷர்களின் அன்புள்ளம் பண்புள்ளவரையும் பாமரரையும் வேற்றுமையின்றி நேசிக்கிறது. சில வேளைகளில் அவர்களது அன்பு பாமரர் மீதே பெரிதளவில் வெளிப்படுகின்றது. ஒரு தாய் தன் குழந்தைகளில் ஒன்று ஊனமுடையதாக இருந்தால் எவ்வாறு அதன் மேல் தனிக் கவனம் எடுப்பாளோ அதே போல் அவதார புருஷர்களும் வழிதவறி நடக்கும் கடவுளின் குழந்தைகளில் அதிகமான கருணையுடன் நடந்து கொண்டனர். அவதாரங்களில் தலைசிறந்தவரான பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரும் இதற்கு விதிவிலக்கல்ல. அப்படியானால் யார் அந்தப் பேறு பெற்ற வழி தவறிய மனிதர்? அவர்தான் கிரீஷ் சந்திர கோஷ்.

# இராமகிருஷ்ண குடும்பம்

## -கிரீஷ் சந்திர கோஷ்

உரிய வயதில் சரியான வழிகாட்டல் இல்லாததால் கிரீஷ் பல தீய பழக்கங்களுக்கு அடிமையாகிவிட்டார். அத்துடன் அவருக்குக் கடவுள் நம்பிக்கையும் கிடையாது. எனினும் பிறருக்கு உதவி செய்வதில் அவர் எப்போதும் முன்னின்றார். பிறரிடம் பணம் சேகரித்து ஏழைகளுக்கு உதவுவார்.

ஒருமுறை கிரீஷ் சந்திர கோஷிற்கு காலரா நோய் வந்துவிட்டது. உயிர் பிழைப்பது கடினம் என்று வைத்தியர்கள் கைவிட்ட நிலையில் அவர் குற்றுயிராய்க் கட்டிலில் கிடந்தார். அப்போது அவருக்கு ஒரு தெய்வீகக் காட்சி கிடைத்தது: சிவப்புக் கரைச் சேலை கட்டிய, தெய்வீக ஒளி பொருந்திய ஒரு பெண் அவர் முன் தோன்றினாள். அவளது முகத்தில் அன்பு கரைபுரண்டு ஓடியது. கிரீஷிற்கு அருகில் அமர்ந்த அவள் கிரீஷின் வாயில் எதையோ ஊட்டியபடி, "இந்தப் பிரசாதத்தைச் சாப்பிடு, உன் நோய் குணமாகிவிடும்." என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினாள். இக் காட்சியின் பின் படிப்படியாகக் குணமடைந்துவிட்டார் கிரீஷ்.



பிற்காலத்தில் அவர் இச் சம்பவத்தைப் பற்றிப் பின்வருமாறு விபரித்தார்: "இந்தக் காட்சி கிடைத்துப் பதினாறு வருடங்கள் கழித்து, அதாவது 1891இல் முதன் முதலாக ஜெயராம்பாடி சென்று அன்னை ஸ்ரீ சாரதா தேவியைத் தரிசித்தேன். அன்னையின் முகச்சாயல் புனிதப் பிரசாதத்தை அளித்து எனது உயிரைக் காப்பாற்றிய அந்தப் பெண்ணின் முகத்துடன் ஒத்திருந்ததைக் கண்டு திகைத்துப் போனேன். காலரா நோயிலிருந்து என்னைக் காப்பாற்றியது அன்னைதான் என்பதை அன்றுதான் அறிந்து கொண்டேன்."

பார்த்தீர்களா நண்பர்களே, தவறான வழியில் சென்றாலும் அன்னை அவருக்கு அபயமளித்தார். வழிதவறிய தன் குழந்தைகளிடமே இறைவன் இவ்வளவு அன்பைப் பொழிகிறாரே, அறநெறி பயிலும் எங்களை அவர் எவ்வளவு நேசிப்பார்! கிரீஷ் சந்திர கோஷின் வாழ்வில் இதுபோன்ற இன்னும் பல நெகிழ்ச்சியான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றை அடுத்துவரும் இதழ்களில் எதிர்பாருங்கள்.

> உலகம் முழவதையுமே உன் சொந்தமாக்கக் கற்றுக்கொள்.
> யாரும் அன்னியரல்ல. உலகம் முழுவதுமே உன் சொந்தம்தான்.
> - அன்னை ஸ்ரீ சாரதா தேவியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமிஜியும் குழந்தையும்

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் தங்கியிருந்தார். அவர் தினமும் ஒரு குறிப்பிட்ட வீதியால் நடந்து செல்வது வழக்கம். அவ் வீதியிலுள்ள ஒரு வீட்டில் ஒரு குழந்தை, தன் தாயை வேலை செய்ய விடாமல் குழப்படி செய்து கொண்டிருந்தது. இதனை வெகு நாட்களாக அவதானித்த சுவாமிஜி, ஒருநாள் அந்தத் தாயிடம் சென்று பணிவுடன், "குழந்தையை சிறிது நேரம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் வேலை செய்து முடிந்ததும் அவனைப் பெற்றுக் கொள்ளுங்கள்." என்று கூறினார். குழந்தையின் தாயும் அதற்குச் சம்மதித்துக் குழந்தையை சுவாமிஜியிடம் கொடுத்தாள். என்ன ஆச்சரியம்! சுவாமிஜியிடம் சென்றதும் குழந்தை அமைதியானது. அதுவரை வீரிட்டு அழுது அமர்க்களம் செய்து கொண்டிருந்த குழந்தை சுவாமிஜியிடம் சென்றதும் மிகவும் அமைதியாகிவிட்டது.



அதைவிட ஆச்சரியம் என்னவெனில், இந்த நிகழ்ச்சியின் பின்னர் ஒருநாள் கூட அக்குழந்தை இவ்வாறு அமர்க்களம் செய்வதில்லை என்பதுதான்.

பார்த்தீர்களா நண்பர்களே! சுவாமிஜியிடம் சென்றதால் எப்படி அக்குழந்தை சுவாமி விவேகானந்தரின் குணங்களைப் பெற்றது என்று!

எனவே நாங்களும் அவ்வாறே அவரது நற்குணங்களைப் பெறுவதற்கு அவர் நம்மை மடியில் எடுத்து வைத்துக்கொள்ளத் தேவையில்லை. அவரைத் தூய மனதுடன் பிரார்த்தனை செய்வதே போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்வினை தன்னைச் சுடும்

ஒரு காட்டில் நரி ஒன்று வசித்து வந்தது. அதற்கு நெடுங் காலமாக கழுதையுடன் பகை இருந்து வந்தது. ஒருநாள் காட்டின் ராஜாவான சிங்கத்திற்கு நோய் ஏற்படவே அது படுத்த படுக்கையானது. ஒருவராலும் அதைக் குணப்படுத்த முடியவில்லை. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட நரி கழுதையைப் பழிவாங்க எண்ணியது. அது சிங்கத்திடம் "மகாராஜாவே உங்கள் நோய் குணமாக ஒரு வழி இருக்கிறது" என்றது. சிங்கமும் "சீக்கிரம் கூறு" என்றது. அதற்கு நரி, "ராஜாவே காட்டிலுள்ள கழுதையாரின் மூளையைச் சாப்பிட்டால் உங்கள் நோய் தீரும் என்று வைத்தியரொருவர் கூறக் கேட்டேன்" என்றது. உடனே மகிழ்ந்த சிங்கம் "உடனே கழுதையொன்றை என் முன் கொண்டு வாருங்கள்" என்று ஆணையிட்டது.

உடனே நரி கழுதையை அழைத்துவரச் சென்றது. சிங்கத்தின் சேவையாளரான முயல் இதை அறிந்தது. வெகு நாளாக நரி கழுதையுடன் கோபமாகவுள்ளது. எனவேதான் தன் பழியைத் தீர்த்துக் கொள்ளத் திட்டமிடுகின்றது என்று முயல் விளங்கிக் கொண்டது. எப்படியாவது கழுதையைக் காப்பாற்றி நரியை அடக்க எண்ணியது. முயல் மெதுவாக சிங்கத்தைப் பார்த்து, "மகாராஜாவே நரி உங்களை ஏமாற்றிவிட்டது" என்றது. இதைக் கேட்டுக் கோபமடைந்த சிங்கம், "என்ன உளறுகிறாய்?" எனக் கேட்டது. முயலோ "பொய்யல்ல, இது உண்மைதான் ராஜா. கழுதைக்குத்தான் மூளையே இல்லையே! அப்படியிருக்கையில் நரி எப்படிக் கழுதையின் மூளையைக் கொண்டுவரும்? மருந்து அது அல்ல. நரி மாற்றிக் கூறிவிட்டது." என்றது.

மேலும் கோபமடைந்த சிங்கம், "ஹா! அப்படியா செய்தது அந்தக் குள்ள நரி. அது வரட்டும் பார்த்துக் கொள்கிறேன். சரி சேவகா, நீ சரியான மருந்தைச் சீக்கிரம் சொல்" என்றது. அதற்கு முயல், "ராஜாவே நரியின் மூளையைத்தான் காலை எழுந்ததும் வெறும் வயிற்றிலே உண்ண வேண்டுமாம். அப்போதுதான் இந்நோய் குணமாகும் என்று வைத்தியர் நரியிடம் கூறியதை நான் கேட்டேன். தன் உயிருக்குப் பயந்து நரி அப்பாவியாகிய கழுதையை மாட்டிவிடப் பார்க்கிறது" என மிகவும் பணிவுடன் கூறியது. அச்சமயம் வெகு தூரத்தில் நரி வருவதைக் கண்ட முயல், "ராஜாவே, அதோ நரியார் வருகிறார். தாமதிக்காமல் செயலில் ஈடுபடுங்கள். இல்லாவிட்டால் மறுபடியும் அது எங்களை ஏமாற்றிவிடும்" என்றது. நரியுடன் கோபமாகவிருந்த சிங்கமும் நரி வந்தவுடன் அதன் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் அதன் மீது பாய்ந்து அதைக் கொன்றது. இச்செயலைப் பார்த்த முயல் ஒரு அப்பாவியைக் காப்பாற்றியதுடன் ஒரு நயவஞ்சகனையும் அழித்துவிட்ட சந்தோசத்தில் துள்ளிக் குதித்தது. மற்றவர்களுக்குத் தீது செய்ய நினைத்தால் அது எமக்கே தீங்காகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திகள்



✦ இந்து மதத்தின் பெருமையை உலக அரங்கில் நிலை நாட்டிய சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி தினம் இவ்வருடம் ஜனவரி 17ம் திகதி கொழும்பு இராமகிருஷ்ண மிஷனிலும் அனுஷ்டிக்கப்பட்டது. மங்களாராத்தியுடன் காலை 5 மணிக்கு ஆரம்பமாகி, சுவாமிஜிக்குப் பிடித்தமான கடோபநிடத பாராயணம், விசேட பூசை, பஜனை, ஹோமம் என்பவற்றுடன் காலைப் பூசை சிறப்பாக நடைபெற்றது. மாலையில் பஜனை, சொற்பொழிவு, அர்ச்சனை, ஆரதி என்பன இடம்பெற்றன.



✦ சிவ விரதங்களுள் முக்கியமானது சிவராத்திரி விரதமாகும். மாசி மாதத்தில் வரும் தேய் பிறை சதுர்த்தசி இரவே மகிமை மிக்க மகாசிவராத்திரி ஆகும். இவ்வருடம் பெப்ரவரி 23ம் திகதி எமது ஆசிரமத்தில் மகாசிவராத்திரி விரதம் மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. நான்கு யாமமும் விசேட பூசை இடம்பெற்றதுடன் தொடர்ந்து இறை நினைவில் இருக்க திருமுறை பாராயணம், சிவ நாமாவளி, பஜனை, தியானம், அர்ச்சனை என்பனவும் இடம் பெற்றன.



ஒவ்வொரு யாமப் பூசை முடிவிலும் பக்தர்கள் சிவலிங்கத்திற்கு வில்வதளம் சமர்ப்பித்து வழிபட்டார்கள். இறுதியில் யாகத்துடன் சிவ பூசை முடிவுற்றது. சிவ-விஷ்ணு அருளால் தோன்றிய கதாதரன் சிவவேடம் பூண்டு சிறுவயதிலேயே இறை நினைவில் மூழ்கிய சம்பவம் இடம் பெற்றதும் ஒரு சிவராத்திரி நன்னாளிலேயே ஆகும்.



✦ பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜெயந்தி தினம் பெப்ரவரி 27ம் திகதி கொண்டாடப்பட்டது. காலை மங்களாராத்தியுடன் ஆரம்பமாகி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட பூசை, பஜனை, ஹோமம் என்பவற்றுடன் காலைப் பூசை சிறப்பாக நடைபெற்றது. மாலையில் பஜனை, சொற்பொழிவு, அர்ச்சனை, ஆரதி என்பன இடம்பெற்றன.





✦ பெப்ரவரி 27ம் திகதி எமது சமய பாடசாலை மாணவர்களால் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. விளங்கிடும் சமயங்கள் பலவானாலும் வணங்கிடும் இறைவன் ஒன்றே! ஒன்றேயான இறைவனை அடைந்திட உதவும் வேறுபட்ட பாதைகளே சமயங்கள் என்பதைத் தமது வாழ்க்கையின் மூலம் வாழ்ந்து நிரூபித்த பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜெயந்தி விழா சர்வமத விழாவாகக் கொண்டாடப்பட்டது. இந்து, இஸ்லாம், பௌத்த, மற்றும் கிறிஸ்தவ மத மாணவர்களின் கலாச்சார நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. காலையில் குருதேவரின் திருவுருவம் வீதியுலாவாக எடுத்து வரப்பட்டது. அதன்பின் கலை நிகழ்ச்சிகள் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றன. விழாவில்



பிரதம விருந்தினராக மத அலுவல்கள் ஒழுக்க மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் திரு. எச்.எம். ஹேரத் கலந்து சிறப்பித்தார்.



✦ இறைவனின் நாமசங்கீர்த்தனத்தின் மூலமே இறைவனை உணரலாம் என்ற இலகு வழியைக் காட்டிய ஸ்ரீசைதன்ய மஹாபிரபுவின் ஜெயந்தி மார்ச் 11ம் திகதி பஜனை, பூசை என்பவற்றுடன் கொண்டாடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிந்தனைக்கு...



அவர் ஒரு புகழ் பெற்ற விஞ்ஞானி. பௌதிகவியலில் பல அரிய ஆய்வுகளைச் செய்தவர். அவர் ஒரு முறை அமெரிக்காவிற்கு ஆய்வு நிமித்தமாகச் சென்றார். அங்குள்ள விஞ்ஞானிகள் இவரது வருகையைக் குறித்து மகிழ்வெய்தியவர்களாய் அவருக்கான அறையைத் தயார் செய்தனர். பெரிய விஞ்ஞானியாதலால் அதற்கேற்ற முறையில் அறையை மிகவும் கவனமாகத் தயார் செய்தனர்.



அங்கு எவ்வித பதற்றமும் இன்றி அமைதியாகச் சென்ற அவ்விஞ்ஞானி தனது அறையை மெதுவாக நோட்டமிட்டார். சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு அங்கிருந்த விஞ்ஞானி ஒருவரிடம் சென்று, "அறையில் குப்பைத்தொட்டி ஒன்று இருந்தால் நன்றாக இருக்கும்" என்றார். இதைக் கேட்ட அந்த விஞ்ஞானிக்கு ஒரே வியப்பு. இவ்வளவு பெரிய விஞ்ஞானி குப்பைத்தொட்டியை அவசியமாகக் கருதுகிறாரே, என்றெண்ணி அவரிடமே இதைப் பற்றிக் கேட்டார். அப்போது அவ்விஞ்ஞானி, "நான் ஓர் சராசரி மனிதன். நிறையத் தவறுகள் விடுவேன். இதனால் பல பக்கங்கள் வீணாகும். எனவே அவற்றைப் போடுவதற்கு ஓர் குப்பைத்தொட்டி வேண்டும்" என்றார்.

இவ்வாறு மிகவுயர்ந்த நிலையிலிருந்தும் பணிவுடன் நடந்து படிப்பினையாய்த் திகழும் அவ்விஞ்ஞானி யார் தெரியுமா? அவர்தான் சார்புத் தத்துவத்தை உலகுக்கு அறியத்தந்த மிகப்பெரும் விஞ்ஞானி சேர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

**அட்டைப்பட விளக்கம் -**

வசந்த காலத்தில் வண்ண மலர்களும் புதிய பசிய தளிர்களும் மரங்களில் துளிர்ப்பது போல், புதிய வருடத்தில் எங்கள் உள்ளத்திலும் புதிய நற் சிந்தனைகள் தழைக்கட்டும்.

அன்பளிப்பு ரூ. 10.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org